# திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் பிறந்த நாள் விழா




“நல்ல குறிக்கோளை

அடைவதற்காகத் தொடர்ந்து

முயலும் மனிதனின் செயல்பாடே

பிற்காலத்தில் அனைவரும் படிக்கும்

வரலாறாக மாறுகிறது”

- காரல் மார்க்ஸ் வாக்குப்படி, திருக்குறள் உலகமெல்லாம் பரவ வேண்டும் என்ற,குறிக்கோளினை உடைய நமது திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார், பிறந்த நாளை முன்னிட்டு 25.3.2019 இலக்கிய பதாகை பறப்பு-7 கொண்டாடப் பட்டது.

தமது வாழ்த்துக்களையும், ஆசிகளையும், ஆதரவையும் மேதகு டாக்டர் அ.ச.கணேசன் (வேந்தர்), டாக்டர் அனுராதா கணேசன் (இயக்குநர்) அவர்கள் அளித்தனர்.

விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனத்தின்முதன்மை கல்வி அலுவலர் முனைவர் மு.பொன்னவைக்கோ மற்றும் திரு.சீனிவாசன் திருநாவுக்கரசு தலைமை செயல்பாடு இயங்குமுறை அவர்களின் முன்னிலையில் இவ்விழா நடைபெற்றது.

முனைவர் ஆர்.சண்முகவள்ளி (இயக்குநர்) கலை மற்றும் அறிவியல் புலம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். முனைவர் ப.ஜெயபாரதி (தமிழ்த்துறை தலைவர்) அவர்கள் வரவேற்புரை, அறிமுக உரையினையும் வழங்கினார்.

இவ்விழாவின் சிறப்பு விருந்தினராக கவிஞர், எழுத்தாளர், திரைப்பட இயக்குநர் என பன்முக தன்மை கொண்ட ஆளுமை திரு. ராசி.அழகப்பன் அவர்கள் வருகை புரிந்து பேசினார். அவர் பேசிய போது சிலப்பதிகாரத்தில் கோவலன், கண்ணகி திருமணம் பற்றியும், ராமாயண வரலாற்று செய்திகளை பற்றி விளக்கி கூறியும் இன்றைய இளைஞர்கள் தம் வாழ்நாளில் மிகுதியான நேரத்தை அலைபேசியிலேயே தொலைத்து விடுகின்றனர் எனவும் பேசினார். வாழ்க்கை சிறப்பாக அமைய குறளை நாள்தோறும் படிக்கவும், பின்னர் அதனை கடைபிடித்து வாழ்கின்ற போது அழகான ஒரு சமூகத்தினை உருவாக்கவும் முடியும் என்றார்.





இந்நிகழ்வில் குறள் ஒப்புவித்தல் போட்டி நடத்தப் பட்டு பேராசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் சான்றிதழ் மற்றும் நினைவு பரிசும் வழங்கப் பட்டது. நன்றியுரையினை திரு அ.முத்துக்குமார் உதவிப்பேராசிரியர் வழங்கினார்.தமிழ்த்துறை சார்பில் விழா ஒருங்கிணைப்பு செய்யப்பட்டு இருந்தது.

இவ்விழா, மாணவ மாணவிகள், அனைத்து துறை சார்ந்த பேராசிரியர்கள், மற்றும் அலுவலக ஊழியர்களின் நல் ஆதரவுடன் இனிதே நடைபெற்றது.






Vinayaka Mission's
Research Foundation




திருக்குறள் செம்மல்
ந.மணிமொழியனார் முத்தமிழ் ஆயம்


Aarupadai Veedu
Institute of Technology
Approved by AICTE
Vinayaka Mission's
Research Foundation


n of VMRF - DU

